1987 மே 4]

சுத்திகரிப்பு ஆலை வைத்தால்தான் அனுமதி வழங்கப்படும் என்ற விதியை வைத்திருக்கிறோம். ஏற்கனவே இருக்கிற ஆலைகள், புதிதாக வைக்கவேண்டுமென்று வற்புறுத்தலாமே தவிர, வேறுவழியில்லை. மீறுகின்றவர்கள்மீது வழக்குதான் தொடர முடியும் அதை அரசு தொடுத்துக் கொண்டு வருகிறது.

கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, குனியமுத்தூர், மதுக்கரையில் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி.

572—(*வினா எண். 11696) திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, குனியமுத்தூர், மதுக்கரையில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான மாணவர் விடுதி ஒன்றினைத் தொடங்கிடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமங்கலம் அரசினர் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் இல்லம்.

573—(*வினா எண் 12424) திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமங்கலத்தில் உள்ள அரசினர் மாணவர் பிற்படுத்தப் பட்டோர் இல்லத்தில் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதி குறிப்பாக, திருமங்கலம் பொருளாதார ரீதியிலே மிகவும் பிற்பட்ட பகுதி என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே அறிவார்கள். இந்தத்